# தமிழ்நாட்டு அரசியலில் மீண்டும் தமிழ்த் தேசியவாதம்?

தமிழ்நாட்டின் அரசியல் களம் இப்போது கொழும்பினதும் புதுடில்லியினதும் விசேட கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்குக் காரணம் 5 கோடி மக்களைக் கொண்ட தமிழ்நாட்டில் மீண்டும் தமிழ்த் தேசிய எழுச்சி தலைதூக்கி வருகின்றதா என்ற ஐயம்தான்.

இந்த ஐயத்தை உறுதிப்படுத்தும் வகையில், அண்மைக்காலமாக நடந்துவரும் சில சம்பவங்கள் எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் அரசியல் பூகம்பத்தை ஏற்படுத்திவிடுமோ என்று, பல அரசியல் விமர்சகர்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

உறைந்துகிடக்கும் தமிழ்நாட்டின் தமிழ்த் தேசியவாதத்தை அவ்வப்போது கிளறிவிடும் காரணிகளாக இந்தி எதிர்ப்பு உணர்வும், காவிரி நீர்ப் பிரச்சினையும் இருப்பதுண்டு. ஆனாலும் தேவை ஏற்படும்போது இவற்றைக் கையிலெடுத்து தமிழ்த் தேசிய உணர்வைக் கிளறி, அவற்றை வாக்கு வேட்டைக்குப் பயன்படுத்திய பின் கைவிட்டுவிடும் வழக்கத்தைத்தான், திராவிடக் கட்சிகள் தமது மரபாகக்கொண்டுவருகின்றன.

ஆனால் இப்போது ஒரு புதிய தலைமை தமிழ்நாட்டின் தமிழ்த் தேசிய எழுச்சிக்குப் புத்துயிர் அளிக்க முயல்கின்றது என்ற செய்தி, தமிழ் இனத்திற்கெதிரான சக்திகளை (இந்தியா - இலங்கை உட்பட) கலவரப் படுத்தியுள்ளது.

திராவிட முன்னேற்றக்கழகத்திற்குள்ளேயே ஒரு சக்திமிக்க தலைவனாக வளர்ந்துவரும் திரு. வை. கோபாலசாமியே, அத்தமிழ்த்தேசியவாதத்திற்குத் தலைமை கொடுக்கின்றார் என்று கருதப்படுகின்றார்.

இந்திய ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில், தனது உயிரையும் பொருட்படுத்தாது தமிழீழம் வந்து, மணலாற்றுக் காட்டுக்குள் சென்று தலைவர் பிரபாகரனைச் சந்தித்து, ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுத்தவர் இவர் என்பது, குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் நவீன தமிழ்த் தேசியவாதத்திற்கு அரசியல் தலைமை கொடுத்து, அதன் உச்சக்கட்டமாகப் பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து, ஒரு காலகட்டத்தில் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவையும் தி. மு. க. பெற்றிருந்தது.

ஆனாலும், இந்திய மத்திய அரசின் மிரட்டலுக்குப் பயந்தும், பதவி சுகங்களுக்கு ஆசைப்பட்டும் தி. மு. கவின் தலைமையே தமிழ்த் தேசிய எழுச்சியை மழுங்கடித்தது. இருந்த பொழுதிலும் தி. மு. க. வின் இடைநிலைத் தலைவர்கள் மத்தியிலோ, அடிமட்டத் தொண்டர்கள் மத்தியிலோ தமிழ்த் தேசிய உணர்வு சீரழிந்ததாகச் சொல்லமுடியாது. ஏனெனில் தி.மு. கவின் அத்திவாரமே தமிழ்த்தேசியவாதம்தான்.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக தமிழ்நாட்டில் நிகழ்ந்து வரும் சில சம்பவங்கள் தமிழ்நாட்டின் தமிழ்த் தேசியவாதத்திற்குப் புத்துயிர் ஊட்டிவருகின்றன.

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் ஒரு புறமும், தி. மு.கழகத்தினுள் நடக்கும் உட்கட்சிப் பிரச்சினைகள் - அவற்றின் பரிமாணங்கள் மறுபுறமுமாகத் தமிழ்நாட்டின் தேசிய அரசியல் சூடுபிடித்துள்ளது.

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பான ஜெயலலிதாவின் செயல்கள் குறுகிய அரசியல் நோக்கங்கள் கொண்டவை என்பதில், எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால் அந்தக் காவிரி நீர்ப் பிரச்சினை தமிழக மக்களின் தேசிய உணர்வுடன் சம்பந்தப்பட்டது என்றவகையில், அது முக்கியமானதொன்றாகும்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் தஞ்சை மாவட்ட மக்களின் பொருளாதார வாழ்வு, இந்த ஆற்று நீரில்தான் தங்கியுள்ளது.

இதேபோன்றுதான் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரமும் இப்போது தமிழகத்தில் சூடுபிடித்துக்கொண்டிருக்கின்றது.

கொங்கிரஸ் - அ. தி. மு. க. உறவு முறிந்தபின், அ. தி. மு. கவின் தமிழ்நாடு அரசு கலைக்கப்படலாம் என்ற அபிப்பிராயம் மேலோங்கியிருந்தது.

இதனால், தி. மு.க. தலைமை மீண்டும் பதவிக்கு வருவதற்காக, இந்தி 'எதிர்ப்பு ஆயுதத்தைக் கையிலெடுத்தது.

ஆயினும் செல்வி ஜெயலலிதாவினதும் அவரது மந்திரிகளினதும் கோமாளித்தனமான செயற்பாடுகளினாலும் பலவீனமான ஆட்சியினாலும், தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் செல்வாக்கு சரியத்தொடங்கியது.

இந்த நிலையில் தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல் நடந்தால் தி. மு. க. தான் வெற்றி பெறும் என்ற கருத்தும் பலமடையத் தொடங்கியது. இந்தக் கருத்தில் நம்பிக்கை கொண்ட தலைமை, வாக்கு வேட்டைக்காகத் தனது இறுதி முயற்சியான இந்தி எதிர்ப்பு ஆயுதத்தை உடனடியாகப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை என்பதை உணரத் தொடங்கியது. எனவே தனது இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளைச் சத்தமின்றிக் கைவிட்டது.

ஆனாலும் கட்சியின் ஒருபிரிவினர் - இளைஞர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இடைநிலைத் தலைவர்கள் மற்றும் சில மூத்த தலைவர்களும்- இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் செயற்படுத்தி வருகின்றனர்.

இப் பிரிவினரின் நோக்கம் உண்மையில் இந்தி மேலாதிக்கத்தை முறியடிப்பதுதான். இந்தியா? இந்தியாவா? என்பதுதான் இவர்களின் பிரதான கோஷம். தொடர்ந்தும் இந்தி திணிக்கப்பட்டால், இந்தியாவிற்குள் தமிழ்நாடு இருக்க மாட்டாது என்பதுதான் இதன் பொருள்.

'இலட்சியப்பாதை' என்ற ஒரு வார இதழில் திரு. வை. கோபாலசாமி இப்படி எழுதுகிறார்: ''விரைவாக நடந்தேறி வரும் சம்பவங்கள் உலகிற்கு ஒரு விடயத்தைக் கூறுகின்றன. அதாவது, 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவின் வரைபடம் புதிதாக வரையப்படும்......''

பிரபல திரைப்பட நடிகர் சத்தியராஜ் 'தேவி' வார இதழ் மூலம் இப்படிச் சொல்கின்றார்:

''தொடர்ச்சியாக இந்தி திணிக்கப்பட்டால் தமிழ்நாட்டு மக்கள் சேர, சோழ, பாண்டிய அரசர் காலத்தில் தமிழர்கள் சுதந்திரமாக இருந்த காலத்தை நினைத்துப்பார்க்க வேண்டியிருக்கும்.''

(11 ஆம் பக்கம் பார்க்க)

Tamileelam Archive

## தமிழ்நாட்டு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் தமிழ்நாட்டின் தென்பகுதி மாவட்டங்களிலேயே தீவிரமாக நடைபெறுகின்றன. திரு. வை. கோபாலசாமியின் செல்வாக்கும் இந்தப்பகுதிகளிலேயே நிறைந்து காணப்படுகின்றது.

காவிரி நீர்ப் பிரச்சினையாலும் இந்தி எதிர்ப்பு உணர்வாலும் தென்தமிழ்நாட்டுத் தமிழர்களிடையே தமிழ்த் தேசிய எழுச்சி புத்துயிர் பெற்று வருகின்றது.

இத்தமிழ்த்தேசிய எழுச்சிக்கு திறமையும் மக்கள் ஆதரவும் நிறைந்த திரு. வை. கோபாலசாமி தலைமை கொடுக்கின்றார் என்ற செய்தி பரவும் போதே, தமிழின விரோதிகள் கலவரமடைந்தனர்.

திரு. வை கோபாலசாமி பேசும் கூட்டங்களுக்கு இளைஞர்கள் பெருமளவில் வருகின்றனர். அவரது அனல்பறக்கும் பேச்சுக்கள் தமிழ்த் தேசியத்துக்கு புத்துணர்ச்சி ஊட்டும் வகையிலேயே அமைந்திருக்கின்றன. அதேவேளை திரு. வை. கோபாலசாமி தமிழீழ தேசியத்தின் நண்பனாகவும் இருந்து வருகின்றார் என்ற செய்தியும், தமிழின விரோதிகளுக்கு அச்ச மூட்டியுள்ளது. இதனால் திரு. வை. கோபாலசாமியின் எழுச்சியை முறியடிக்க உள்ளேயும் வெளியேயும், சதியும் கழுத்தறுப்புகளும் நடைபெறுகின்றன.

இந்தச் சூழ்ச்சிகளை திரு. வை. கோபாலசாமி எப்படி எதிர்கொண்டு முறியடித்து வெற்றி பெறப்போகின்றார் என்பதே, உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.